DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.100/2021**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தியாகராஜன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | நாராயணன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், குளித்தலையில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும் 25.09.2017 ம் அன்று தான் பார்த்தேன் அதற்கு முன்பு பார்த்ததில்லை. 25.09.2017 ம் தேதி காலை 11.30 மணியிருக்கும் நான் கரூருக்கு இருசக்கர வாகனத்தில்சென்று கொண்டிருந்தேன். போலிசார் வாகன சோதனை செய்து கொண்டிருந்தார்கள். என்னைத் தேக்கி விசாரித்ததார்கள். எனக்குப்பின்னால் ஆஜர் எதிரி SPlender மாதிரி ஒரு வண்டியில் வந்து திரும்பினார் அவரை போலிசார் பிடித்து விசாரித்தார்கள். அந்த வண்டியில் Number Plate இல்லாமல் இருந்ததது.

2. போலிசார் வண்டி யாருடையது என்று போலிசார் கேட்டார்கள் வண்டியை எடுத்து வந்ததாக ஆஜர் எதிரி சொன்னார். வண்டியைப்பிடித்தற்காக போலிசார் கையொப்பம் கேட்டார்கள் போட்டேன் திருட்டு வண்டி என்று சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**கைப்பற்றுதல்**

**மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் குளித்தலையில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். போலிசார் எந்த இடத்தில் வாகன சோதனை செய்தார்கள் என்றால் முடக்குசாலையில் செய்தார்கள். நானும் பரத்தும் வந்தோம். எங்கிருந்து எங்கு சென்றோம் என்றால் குளித்தலையில் இருந்து கரூர் சென்றோம். முடக்குச்சாலை என்பது போக்குவரத்து மிகுந்த பகுதி, மக்கள் நடமாடும் பகுதி என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் எதிரியை போலிசார் பிடித்து வண்டியும், செல்போன்கள் காணாமல் போயிருந்தது என்று விசாரித்தார்கள் நான் பக்கத்தில் இருந்தேன் அதற்காக கையொப்பம் வாங்கினார்கள். எழுதப்படாத தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் எனது முகவரி பக்கத்தில் கையொப்பம் செய்தேன்.

2. நான் ைையெழுத்து செய்த பேப்பரில் எதிரிதான் குற்றவாளி என்ற சங்கதி எழுதவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்தவரையும் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் என்னுடைய அடையாள அட்டை கேட்டு வாங்கினார்களா என்றால் இல்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 25.09.2017 அன்று குளித்தலை-கரூருக்கும் செல்லவில்லை சம்பவத்தை பார்க்கவில்லை போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம்அளிக்கிறேன்.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 15:13:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.